செ.வெ.எண்: 27/2021 நாள்: 12.08.2021

**பொதுமக்கள் கொரோதனா நோய் தொற்றிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள சமூக இடைவெளி, கைகளைஅடிக்கடி சுத்தப்படுத்துதல் மற்றும் முகக்கவசம் கட்டாயம் அணிந்து நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு அரசுக்கு ஒத்துழைப்பு தர வேண்டும்.**

**கொரோனா நோய் தொற்று முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் வரும் வரை ஒவ்வொரு குடிமகனும் சுயகட்டுப்பாட்டுடன் இருந்து நோயின் தாக்கத்தை அடுத்த கட்டத்திற்கு செல்லாமல் அனைவரும் அரசிற்கு ஒத்துழைப்பு தரவேண்டும்.**

**மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் கொரோனா தடுப்பூசி முகாமினை தொடங்கி வைத்து தகவல்!!!**

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டத்திற்குட்பட்ட முத்தூர், வெள்ளக்கோவில் மற்றும் காங்கேயம் பகுதிகளில் இந்திய தொழில் கூட்டமைப்பு மற்றும் ஏ.எம்.சி பல்நோக்கு மருத்துவமனை மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் கொரோனா தடுப்பூசி முகாமினை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வினீத் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (12.08.2021) துவக்கி வைத்தார்.

***மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தாவது :***

திருப்பூர் மாவட்ட இந்திய தொழில் கூட்டமைப்பு, திருப்பூர் AMC மருத்துவமனை மற்றும் மாவட்ட நிர்வாகம் இணைந்து 1200 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டு பொதுமக்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம்கள் நடைபெற்று வருகிறது. அந்தவகையில் நமது சமூக பங்களிப்பு நிதியிலிருந்து நமது மாவட்டத்திற்கும் கொரோனா தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகிறது.

கொரோனா நோய் தொற்று மனித இனத்திற்கு பெரும் சாவலாக அமைந்துள்ளது. இந்த தொற்றின் காரணமாக கடந்த சில காலங்களில் மனித வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு, கடந்த சில மாதங்களுக்கு முன்பு நோய் தொற்று உட்சகட்டமாக இருந்ததை அடுத்து ஊரடங்கு, தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தினசரி நோய் தொற்று தமிழகத்தில் தினசரி தொற்று 26,000 என இருந்ததை தற்போது தினசரி 2,000 என்ற அளவிற்கு வெகுவாக குறைந்து கொரோனா நோய் தொற்றை கட்டுபடுத்தி கொரோனா நோய் தொற்று கட்டுப்படுத்தியதில் தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ்ந்து வருகிறது.

பொதுமக்கள் தற்போது இருக்கும் சூழ்நிலையில், அரசு தளர்வுகள் கொடுத்து விட்டது என சுதந்திரமாக இருக்காமல் ஒவ்வொருவரும் விழிப்புணர்வுடன் முகக்கவசம் அணிதல், அடிக்கடி கைகளை சுத்தம் செய்தல், சமூக இடைவெளியை பின்பற்றுதல், தடுப்பூசி செலுத்திக்கொள்ளுதல், அரசு வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி கொரோனா நோய் தொற்றை முழுவதும் ஒழிக்க அரசிற்கு ஒத்துழைப்பு தர வேண்டும்.

கொரோனா நோய் தொற்று அறிகுறிகள் இருப்பவர்கள் தாங்களே மருத்துவம் பார்ப்பதை விடுத்து, மருத்துவர் ஆலோசனையை பின்பற்றி மருத்துவமனையில் முறையான சிகிச்சை மேற்கொள்ளவது தற்பொழுது சூழ்நிலையில் ஒவ்வொருவரின் கடமையாகும். கொரோனா நோய் தொற்று முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் வரும் வரை ஒவ்வொரு குடிமகனும் சுயகட்டுப்பாட்டுடன் இருந்து நோயின் தாக்கத்தை அடுத்த கட்டத்திற்கு செல்லாமல் அனைவரும் அரசிற்கு ஒத்துழைப்பு தரவேண்டும்.

தமிழகத்தில் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி கிடைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அந்தவகையில் செங்கல்பட்டில் கொரோனா தடுப்பூசி உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. முதல் தவணை தடுப்பூசி செலுத்தி கொண்டவர்கள் மீண்டும் 84 நாட்களுக்கு பின் மீண்டும் இரண்டாம் தவணை தடுப்பூசியை செலுத்திக்கொள்ள வேண்டும். பொது இடங்களுக்கு செல்லும் போது சமூக இடைவெளியினை கடைபிடித்து

நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு அரசுக்கு ஒத்துழைப்பு தர வேண்டுமென மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் இன்று (12.08.2021) காங்கேயம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முத்தூர் சாமியப்பா திருமண மண்டபம், முத்தூர் அரசு நடுநிலைப்பள்ளி, வெள்ளக்கோவில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, காங்கேயம் முத்து பழனியப்பா திருமண மண்டபம், திருமுருகன் மண்டபம் மற்றும் சென்னிமலை பழைய அரசு மருத்துவமனை, ஆகிய இடங்களில் தடுப்பூசி முகாமினை தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்வின் போது, தாராபுரம் சார் ஆட்சியர் திரு.ஆனந்த் மோகன் இ.ஆ.ப., இணை இயக்குநர் (மருத்துவபணிகள்) மரு.பாக்கியலட்சுமி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.ஜெகதீஷ்குமார், இந்திய தொழில் கூட்டமைப்பின் நிர்வாகி திரு.திருக்குமரன், ஏ.எம்.சி பல்நோக்கு மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் திரு.பிரபு சங்கர் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**